## 30 மெய்க்காட்டியபடலம்

குலபூஷண பாண்டியன் ஆண்ட காலத்தில் சேனைத் தலைவனாக இருந்த சவுந்தரசாமந்தன். அவன் சிவனடியார்களையே சிவபெருமானாக பாவித்து தொண்டு செய்து வந்தான். அச்சமயம் வேடர்களுக்கு தலைவனான சோதிராயன், பாண்டியன் மீது படையெடுக்கப் போவதாக அறிந்த மன்னன், சேனைத் தலைவனான சாமந்தனிடம் பெரும் நிதி கொடுத்து சேனையை விரிவு படுத்தச் சொன்னான்.

மன்னனால் அளிக்கப்பட்ட பொன்னையும் பொருளையும் எடுத்துக் கொண்டு சென்ற சாமந்தன், அனைத்தையும் சிவ புண்ணிய காரியங்களில் செலவழிக்கத் தொடங்கினான்.

சாமந்தன் பல தேசங்களுக்கு பொருளை அனுப்புவது போலவும், வீரர்களை அனுப்பச் சொல்லி ஓலை விடுவது போலவு ம்நடித்தான். இதனை ஒற்றன் மூலம் அறிந்த மன்னன் மறுநாளே வீரர்கள் அனைவரும் வர வேண்டும் என்று கட்டளையாட்டான் மன்னன்.

இதை அறிந்த சாமந்தன் செய்வதறியாது ஐயனிடம் சென்று, தனது பணிவிடைகளை ஏற்ற ஐயனே தனக்கோர் வழிக்காட்டி அருள வேண்டினான். ஐயனும் தாமே சேனையோடுட்ட வருவதாக வாக்களித்து சேனைகளை எதிர்நோக்கி காத்திருக்கக ட்டளை இட்டார். மறுநாள் காலை சாமந்தன் அரசசபையில் ஐயன் வரவை நோக்கி காத்திருந்தான்.

சிவகணங்களும், பூதகணங்களும், திருநீரும் போர் கவசம் அணிந்து, வாளேந்திய குதிரை வீரர்களாக தம்மை சூழ்ந்து வர, போர்களம் வந்தார் ஐயன் சவுந்தரசாமந்தன் பாண்டியமன்னனிடம் சேனையின் சிறப்புக்களைக் கூறி, பல நாட்டு வீரர்களையும் அறிமுகப்படுத்தினான். சோமசுந்தர கடவுளுக்கு, மன்னன்ஆடைஅணிகலங்கள்கொடுத்தான். ஐயனும் அதனை சாமந்தன் பொருட்டு வாங்கி தரித்து, தனது பரிவாரங்களுக்கும் அளித்து, தாமே குதிரையை பலவிதங்களில் நடத்திக் காண்பித்தார்.

அப்போது அங்கு வந்த ஒற்றன் மூலம் சேதிராயன் காட்டில் புலியால் தாக்கப்பட்டு இறந்த சேதியை அறிந்தனர் . முரசு முழங்கி ஆர்பரிக்கும் சேனையைக் கண்ட மன்னன் மகிழ்ந்து ,சாமந்தனுக்கு பல சிறப்புக்கள் செய்து, சேனைகளை தத்தம் நாடுகளுக்குச் செல்ல விடைக் கொடுத்தான். சவுந்தர சாமந்தனும் சேனையை அனுப்புவதுப் போல் பாவ னைச் செய்ய, ஐயனும்அந்நிலையிலேயே மறைந்தருளினார்.

இதனைக்கண்டபாண்டியன்இதுகூடல்பெருமானின்திருவிளையாடலேஎன்று உணர்ந்துஆனந்தக் கண்ணீர்வடித்துமகிழ்ந்தான்.
ஐயனையேசேனையுடன்வரவழைத்தசாமந்தனுக்குஅவனையேதனக்குகடவுள்எனசவுந்தரசாமந்தனைவணங்கி,
சிறிதுகாலம்மகிழ்ச்சியுடன்ஆண்டுவந்தான்குலபூஷணபாண்டியன்.

..

**பல்லவி**

சோதிராயனை வெல்ல குலபூஷணன் மந்திரி
சவுந்தர சாமந்தனை சேனை திரட்டச் சொன்னான்

**அனுபல்லவி**

பாதிக்கு மேல் உந்தன் பணிக்காக நிதியனைத்தும்
பயன்பட்டதை யறிந்து கோபம் கொண்டான் மன்னன்

**சரணம்**

சேனைகளை உடனே  வரச்சொன்ன பின் காட்டில்
சேதிராயன் இறந்த சேதியை அறிந்த மன்னன்
சேனையைத் திரும்பச் சொல்ல உடன் அங்கு மறைந்த மாயம்
கண்டு மன்னன் மந்திரியை தெய்வமாகக் கொண்டான்